**DEPOSITION OF WITNESS**
**(Chapter XX III Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1**
**RAMANATHAPURAM**
**CASE NO: C.C. 37/2013**
**Deposition of witness for prosecution -PW-6**

| | | |
|---|---|---|
| Name | : | திரு.முகம்மது குலாம் |
| Father Name | : | திரு.அப்துல் ரகீம் |
| Village | : | ரெகுநாதபுரம் |
| Taluk | : | கீழக்கரை |
| Calling | : | டிரைவர் |
| Religion | : | இஸ்லாம் |
| Age | : | 54 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of 02 nd day of December 2019.

முதல் விசாரணை :-

நான் ரெகுநாதபுரத்தில் வசித்து டிரைவராக வேலை செய்கிறேன். கடந்த 03.08.2012ம் தேதியன்று நான் ஊரில் இருந்தபோது காதர் மைதீன், நானும் பஸ் ஸ்டாண்டிற்கு சென்றுகொண்டிருந்தபோது திருப்புல்லாணி உதவி ஆய்வாளர் அவர்கள் இந்த வழக்கின் சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்து மகஜர் தயார் செய்தார்கள். அதை படித்து காண்பித்தார்கள். மேற்படி பார்வை மகஜரில் நானும், காதர் மைதீனும் கையொப்பம் செய்தோம். அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை -

அ.சா.1 எனது தாய் மாமா. சம்பவ இடத்திற்கு அருகில் உள்ள வீடுகளின் உரிமையாளரை பற்றி தெரியுமா என்றால் தெரியும். நான் காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்து விட்டு சம்பவ இடத்தில் கையொப்பம் செய்ததாக பொய்யாக சாட்சியளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.1 எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.